ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 02-T (OS)**
**Code No. : 02-T (OS)**

**ಶಿಕ್ಷಣ – I**

**EDUCATION – I**

# ಶಿಕ್ಷಣದ ಪರಿಕಲ್ಪನಾತ್ಮಕ ಆಧಾರಗಳು

# CONCEPTUAL BASIS OF EDUCATION

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Versions )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**

**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 29. 06. 2015 ]
Date : 29. 06. 2015 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ]
Time : 10.00 A.M. to 1.00 P.M. ]

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பகுதி – A

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மூன்று பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும். அக்கேள்விகளுள்ள பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : 4 × 10 = 40

1. a) கல்வியின் பிரத்தியேக (Individual) மற்றும் சமுதாய (Social) குறிக்கோள்களைப் பற்றி விவரிக்கவும். 6

   b) முறை மற்றும் முறைசாரா கல்வியின் பொருளை விவரிக்கவும். 4

2. a) கல்வித் தத்துவத்தின் நோக்கத்தையும் செயல்களையும் (Scope and functions of philosophy of education) எழுதவும். 6

   b) மொழி மற்றும் கணிதக் கொள்கைகளின்படி தத்துவ அடிப்படைகளை விளக்கவும். 4

3. a) கலந்துரையாடல் முறை (Discussion method) என்றால் என்ன ? கலந்துரையாடல் முறையில் ஏதேனும் இரண்டு தனித்தன்மைகளையும், கலந்துரையாட ன் மூன்று வகைகளையும் விவரிக்கவும். 6

b) பள்ளிகளில் சமூக நிலையாக்கத்தின் வழிமுறையில் (Socialisation process in school) காணப்படும் நான்கு செயல்கள் என்ன ? 4

4. a) நற்பண்புகளின் வடிவமைப்பில் (Shaping values) வகுப்பறை மற்றும் நண்பர் குழுவின் செயல்பாட்டினை விளக்குக. 6

b) மதிப்பீட்டுக் கல்வியைப் (value education) புகட்டும் அணுகுமுறையில் விளக்கமுறை மற்றும் கடமை அடையாளத்தின் செயல்பாடுகளை (Illustration and Token Task approaches) விரிவாக விளக்கவும். 4

5. a) குடும்பத்தில் கல்விசார் செயல்பாடுகளை தெளிவுபடுத்தவும். 6

b) பள்ளியில் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கத்தின் செயல்பாடு என்ன ? 4

6. a) தற்போதையக் கல்விமுறையில் பற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறிய கல்வியின் குறிக்கோள் தொடர்புடைய அம்சங்களை விவாதிக்கவும். 6

b) நவீனமாக்குத ல் (Modernisation) உண்டாகும் பிரச்சனைகளைச் சந்திக்க கல்வி எவ்வாறு பயன்படுகிறது என்பதை தெளிவுபடுத்துக. 4

7. a) ‘உரிமை மற்றும் கடமை’ இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு முகங்கள் என்பதை விவாதிக்கவும். 6

b) தற்போதைய கல்வி திட்ட முறையில் இருமொழி மற்றும் மும்மொழிக் கொள்கையின் பங்கினைப் பற்றி சுருக்கமாக விவரி. 4

## பகுதி – B

II. கீழ்க்கண்ட ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் :

$7 \times 5 = 35$

8. கல்வியின் நோக்கத்தைத் தீர்மானிப்பதற்கு அரசியல் தத்துவத்தின் (Political philosophy) பங்கினை ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

9. தற்போதைய கல்வித்திட்ட முறையில் முத யார் கமிஷன் மற்றும் ஹண்டர் கமிஷனின் பரிந்துரைகள் எந்த வகையில் பிரதிப க்கிறது ?

10. ஆசிரியர் மற்றும் தத்துவத்திற்கிடையே பிரிக்க முடியாத தொடர்பு உள்ளது என்ற வாக்கியத்தைப் பகுத்தாய்வு செய்யவும்.

11. சமூக மாற்றம் (Social change) என்றால் என்ன ? சமூக மாற்றத்தின்மீது தொழில்மயமாக்கம் மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பின் தாக்கம் என்ன ?

12. ஆசிரியர் கல்வி, நற்பண்புகளை நிலைப்படுத்தும் வகையில் (Value based) இருக்க வேண்டும். ஏன் ?

13. குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியைக் (all-round development) கொண்டு வருவதற்கு பள்ளியின் செயல்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் ?

14. புரோபெல் அவர்கள் நிறுவிய கிண்டர்கார்டன் பள்ளியைப் பற்றி விளக்கவும்.

15. அரசியலமைப்பின்படி பட்டிய டப்பட்ட (Listed) கல்வித்துறை (Field of education) தொடர்பான மத்திய அரசாங்கத்தின் செயல்பாடுகளை விளக்கவும்.

16. அரசியலமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுப் பண்புகள் (General values) யாவை ? ஏதேனும் இரண்டு பண்புகளை விளக்கவும்.

17. "ஆசிரியர் கல்வியில் மாற்றம் வேண்டும் (Teacher education has to be made dynamic)" இதன் நோக்கில் NCTE யின் பங்கினை பற்றி கலந்துரையாடவும்.

## பகுதி – C

III. கீழ்க்காணும் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும்.

$5 \times 3 = 15$

18. வேத காலத்தில் காணப்பட்ட கல்வியின் நோக்கங்கள் பற்றி தெளிவுபடுத்தவும்.

19. கல்வித்திட்டத்தின் தன்மைகளைப் (Nature of education) பற்றி எழுதவும்.

20. மத நல் ணக்கத்தைக் கொண்டு வருவதற்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் யாவை ?

21. நுகர்வோரைப் பொறுத்தவரை மத்திய நுகர்வோர் நலக் குழு (Central Consumer Welfare Committee) வழங்கும் ஆறு அறிவிப்புகளைத் தெளிவுபடுத்துக.

22. குழந்தைகளின் சமூகநிலைச் செயல்பாடுகளில் அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் பங்கினைப் (Role of neighbourhood) பற்றி விளக்கவும்.

23. பெஸ்டலோசி அவர்களின் "சுய உற்றுநோக்குதல்"க்கான (Self-obervation) ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகளை விவரிக்கவும்.

24. 'கரும்பலகை நடவடிக்கை' (Operation Blackboard) அறிமுகப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட முக்கிய குறிப்புகள் யாவை ?

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வோர் வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும்.

$10 \times 1 = 10$

25. 'ஆரோக்கியமான உட ல் ஆரோக்கியமான மனதை உருவாக்குவதே கல்வி' (Sound mind in a sound body). இதைக் கூறியவர் யார் ?

26. 'மக்தப்ஸ் (Maqtabs) மற்றும் மதராசா (Madrassas) 'வில் கொடுக்கப்படும் கல்விப் படிநிலைகள் யாவை ?

27. 'மெடாபிசிக்ஸ்' (metaphysics) என்றால் என்ன ?

28. சமுதாய மாற்றத்தில் 'விருத்தியாகு (Cumulative) மற்றும் பின்னோக்கு வடிவங்களுக்கு' (Regressive) இடையேயுள்ள ஒரு வேறுபாட்டை எழுதுக.

29. இலக்கியம் மற்றும் இசை எத்தகைய மதிப்புகளாகும் ?

30. சமூக அமைப்புகளான 'கப்ஸ்' (Cubs) மற்றும் 'புல்புல்'களின் (Bulbul) முக்கிய குறிக்கோள் என்ன ?

31. 'எமி ' என்னும் நூ ன் ஆசிரியர் யார் ?

32. 'சுய ஒழுக்கம்' (Self-discipline) பற்றி காந்திஜியின் கருத்து என்ன ?

33. தேசிய முக்கியத்துவம் பெற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்வது யார் ?

34. பெண்கள் கல்விக்குத் தொடர்புள்ள ஆவணக் கருத்து (Article) என்ன ?